இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 17-06-2025

# தமிழ்நாட்டு நிதியில் ஒன்றிய அரசின் திட்டங்கள்!

ஒன்றிய அரசின் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த விமர்சனம் சரியானதுதான் என்பதை 'இந்து' ஆங்கில நாளேடு உறுதி செய்துள்ளது.

"ஒன்றிய அரசு தரும் நிதியை தமிழ்நாடு அரசு தனது திட்டங்களுக்கு மடைமாற்றம் செய்து கொண்டிருக்கிறது" என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் சொல்லி இருந்தார்கள். இது எந்தளவுக்கு பொய்யான குற்றச்சாட்டு என்பதை விளக்கமாகச் சொல்லி இருந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

**"ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கான எந்தப் புதிய சிறப்புத் திட்டத்தையும் தரவில்லை. அவர்கள் மிகச் சில திட்டங்களுக்கு ஒதுக்கும் பணமும் முழுமையாக இல்லை. அதில் கூடுதல் பணம் போட்டு மாநில அரசுதான் அந்த திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. குடிநீர் திட்டமாக இருந்தாலும்- வீடுகட்டும் திட்டமாக இருந்தாலும் - ஒன்றிய அரசு ஒதுக்கும் பணத்தை வைத்து செயல்படுத்த முடியாது என்பதால் மாநில அரசுதான் கூடுதல் பணம் கொடுக்கிறது. சில திட்டங்களுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கும் பணத்தை விட மாநில அரசு ஒதுக்கீடு செய்யும் தொகை அதிகம். 'படையப்பா படத்தில் ரஜினி - செந்தில் காமெடி பார்த்திருப்பீங்க... 'மாப்பிள்ளை அவர் தான் ஆனா சட்டை என்னுது' - என்பார் ரஜினி. அது போலத்தான் ஒன்றிய அரசு பெயரிலான திட்டத்துக்கும் நிதி கொடுத்து வருகிறோம். ஆனால் அப்படியே பிளேட்டை திருப்பிப் போடுகிறார் உள்துறை அமைச்சர்"** என்று உண்மையை வெளிச்சம் போட்டுச் சொல்லி இருந்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY), பிரதமர் மீன்வளத் திட்டம் (PMMSY), உயிர்நீர் (Jaljeevan) எனப் பிரதமரின் பெயரையும் ஸ்டிக்கரில் பிரதமரின் முகத்தையும் தாங்கிச் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம் அவர்களைக் காட்டிலும் அதிகமாக தமிழ்நாடு அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்கிறது என்பதை 'இந்து' ஆங்கில நாளேடு அம்பலப்படுத்தி இருக்கிறது. ஒன்றிய அரசின் 6 திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசின் பங்கு கூடுதலாக உள்ளது என்று அந்தக் கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது.

*** ஜல் ஜீவன் திட்டத்தில், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் சமமாக செலவுகளை பகிர்ந்து கொள்ளும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இதனை செயல்படுத்தும் போது, மாநில அரசின் பங்களிப்பு 55 சதவீதமாக உள்ளது.**

*** முதியோர் மற்றும் கைம்பெண் ஓய்வூதியத் திட்டங்களுக்கு 79 வயது வரை உள்ளவர்களுக்கு ஒன்றிய அரசின் பங்கு 300 ரூபாயாகவும், 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 500 ரூபாயாகவும் உள்ளது. ஆனால், இத்திட்டப் பயனாளிகளுக்கு ஆயிரத்து 200 ரூபாயை மாநில அரசு வழங்கி வருகிறது.**

*** தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான தனது திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு ஆயிரத்து 500 ரூபாயை ஒவ்வொரு மாதமும் வழங்கி வருகிறது.**

*** பிரதமர் நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்தில் ஒரு வீட்டுக்கு மாநில அரசு செலவிடும் மொத்த தொகை 2 லட்சத்து 83 ஆயிரத்து 900 ரூபாய் ஆக உள்ளது. இதில், ஒன்றிய அரசின் பங்கு 60 சதவீதம் என அறிவிக்கப்பட்ட நிலையில், ஒன்றிய அரசு 50 சதவீதத்திற்கும் குறைவாகவே நிதி அளிக்கிறது.**

*** 100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் எனும் கழிப்பறை கட்டுவதற்கான திட்டங்களுக்கு கடந்த நிதியாண்டில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 39 சதவீதமாகவும், மாநில அரசின் பங்களிப்பு 61 சதவீதமாகவும் இருக்கிறது.**

*** பிரதமர் பெயரில் உள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கான திட்டத்தில் ஒன்றிய அரசின் பங்கு 60 சதவீதம் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இத்திட்டத்தில், ஒன்றிய அரசின் பங்கு 27 சதவீதமாகவும் மாநில அரசின் பங்கு 73 சதவீதமாகவும் உள்ளது.**

- இதுதான் 'இந்து' நாளேடே உறுதிப்படுத்திய உண்மைகள் ஆகும். ஜல்ஜீவன் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசின் நிதி 55 விழுக்காடு தரப்படுகிறது. பிரதமர் நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசின் நிதி 50 விழுக்காட்டுக்கு மேல் தரப்படுகிறது. 100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் எனும் கழிப்பறை கட்டும் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசின் நிதி 61 விழுக்காடு தரப்படுகிறது.

பிரதமர் பெயரில் உள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கான திட்டத்துக்கு தமிழ்நாடு அரசு 73 விழுக்காடு நிதி தருகிறது. திட்டம் அவர்களுடையது, நிதி தமிழ்நாடு அரசினுடையது. இதை வைத்துத்தான், 'மாப்பிள்ளை அவருதான், சட்டை என்னுடையது' என்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய நிதியைத் தருகிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ், ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெற வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிலுவையிலேயே உள்ளது. இது மாநில அரசின் நிதிச்சுமையாக மாறிவிட்டது. தேசிய உயர்கல்வி இயக்கத்தின் (RUSA) கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின்மீதும் புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசுதிணிப்பதால், ஏற்பட்ட விளைவு இது.

ஃபெஞ்சல் புயலானது ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளைக் குறிப்பிட்டு, தற்காலிக மற்றும் நிரந்தர நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்கு 6,675 கோடி ரூபாய் தேவைப்படும் என கேட்கப்பட்டது. நிதி வரவில்லை.

மிக்ஜாம் புயல் தாக்கியது. அதற்குக் கேட்ட நிவாரணமும் வரவில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்ட மூன்று இயற்கைப் பேரிடருக்கு மாநில அரசு கோரிய 37,906 கோடி ரூபாயில் ஒருசதவீதம்கூட இதுவரை தரப்படவில்லை.

**நமக்கு வரவேண்டியதும் வரவில்லை. அவர்கள் தர வேண்டியதும் தரவில்லை. இதுதான் ஒன்றிய அரசின் வஞ்சக ஆட்சிக்கு சாட்சியங்கள் ஆகும்.**






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், புதிய விரிவான மினி பஸ் திட்டம்–2024ன் படி பேருந்து வசதி கிடைக்கப் பெறாத இடங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 3,103 மினிபஸ் வழித்தடங்களை தொடங்கி வைக்கும் விதமாக, நேற்று (16.6.2025) தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், புதிய மினி பஸ் சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ்.எஸ். சிவசங்கர், கோவி. செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, சு.கல்யாணசுந்தரம், முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி. நீலமேகம், என்.அசோக்குமார், துரை.சந்திரசேகரன் மற்றும் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், போக்குவரத்துத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பேருந்து வசதி கிடைக்கப்பெறாத இடங்களில் வசிக்கும்

# மக்கள் பயன்பெறும் வகையில் புதிய விரிவான 'மினி பஸ்' திட்டம்!

## தஞ்சையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**தஞ்சை, ஜூன். 17**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.6.2025) தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், புதிய விரிவான 'மினி பஸ்' திட்டம் 2024ன் படி பேருந்து வசதி கிடைக்கப் பெறாத இடங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய மினி பஸ் சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாட்டில் கடந்த 1997ஆம் ஆண்டு பேருந்து வசதி பெறாத குக்கிராமங்களில் வாழும் மக்கள் பேருந்து வசதி பெறும் நோக்கில் மினி பஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, மாவட்டத்திற்கு 250 மினி பஸ் அனுமதிச்சீட்டுகள் என்ற அடிப்படையில், பேருந்துகள் இயக்கப்படாத (UnServed) வழித்தடத்தில் 16 கி.மீ. மற்றும் பேருந்து கள் இயக்கப்படும் வழித்தடத்தில் (Served) 4 கி.மீ., என மொத்தம் 20 கி.மீ. என்ற அளவில் வழித்தடம் நீட்டிப்பு செய்து மினி பஸ் இயக்கப்பட்டு வந்தன.

இந்த அரசு பொறுப்பேற்றப்பின்னர், இத்திட்டத்தை விரிவாகவும், முறையாகவும் நடைமுறைப் படுத்த பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துத் துறை சார்ந்த பல்வேறு தரப்பினர் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் அரசால் ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் புதிய விரிவான மினி பஸ் திட்டம்2024 கடந்த 23.01.2025 அன்று வெளியிடப்பட்டது. பின்னர், மீண்டும் அத்திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 28.4.2025 அன்று வெளியிடப்பட்டது.

**புதிய விரிவான மினி பஸ் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்!**

நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட குக்கிராமங்களை நகரப் பகுதிகளுடன் இணைக்கும் விதமாக, அதிகபட்ச வழித்தட தூரத்தினை 25 கி.மீ. ஆக உயர்த்தி வழித்தட நீட்டிப்பு செய்து, அதில் பேருந்து இயங்காத வழித்தடங்களில் குறைந்தபட்சம் 65 சதவிகிதம் என இயக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின்படி மினிபஸ்கள் பேருந்து நிறுத்தங்கள் / பேருந்து நிலையங்களில் இருந்து புறப்படவும், நிறுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது மினி பஸ் இயக்கி வருபவர்கள் புதியத் திட்டத்திற்கு மாற்றம் (Migration) பெற்று இயக்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 2094 புதிய வழித்தடங்கள் மற்றும் புதிய திட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்ட 1009 வழித்தடங்கள் என மொத்தம் 3,103 வழித்தடங்கள் அடையாளம் கண்டறியப்பட்டு செயல்படுத்தப் படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு பேருந்து இயக்கப்படாத 25,708 கி.மீ. நீளத்திற்கு புதிதாக பேருந்து வசதி கிடைக்கப் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறைஅமைச்சர்கே.என்.நேரு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, கல்யாண சுந்தரம், முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், துரை.சந்திர சேகரன் மற்றும் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், போக்குவரத்துத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் சுன் சோங்கம் ஜடக் சிரு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அடிப்படை அறிவு கூட இல்லாமல்

# துப்பாக்கிக் கலாச்சாரம் பற்றி எடப்பாடி பழனிசாமி பேசலாமா?

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கண்டன அறிக்கை!

*சென்னை, ஜூன் 17 - போலீஸ் விசாரணை பற்றி அடிப்படை அறிவு கூட இல்லாத பழனிசாமி காவல் துறைக்குப் பொறுப்பு வகித்திருக்கிறார் எனவும் துப்பாக்கி கலாச்சாரம்தான் பழனிசாமி ஆட்சியில் நிலவிய அமைதி, வளம், வளர்ச்சியா? என்றும் அ.தி.மு.க. ஆட்சியில் துப்பாக்கி கலாச்சாரம் பற்றி உயர் நீதிமன்றமே கண்டித்தது நினைவில்லையா? என்றும் கேள்விகள் எழுப்பி போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவரது கண்டன அறிக்கை வருமாறு:-*

*பா.ம.க. இளைஞரணி மாவட்டச் செயலாளர் சக்கரவர்த்தி துப்பாக்கியில் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருப்பது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. தமிழ்நாட்டின் பாதுகாப்பைச் சீர்குலைத்துச் சீரழிவு ஆட்சி நடத்திய பழனிசாமி, திமுக அரசைக் குறை சொல்வதற்கு அருகதை கிடையாது!*

*சக்கரவர்த்தி வழக்கில் சம்பவம் நடந்த 3ஆவது நாளே முக்கியக் குற்றவாளி கள் இருவரை போலீஸ் கைது செய்துள்ளது. சக்கரவர்த்தி 11.06.2025ம் தேதி இரவு பைக்கில் வீட்டிற்குச் சென்றவர் சாலையில் உயிரிழந்து கிடந்தார். சடலத்தை உடற்கூறு ஆய்வுக்கு அனுப்பி விட்டு, சந்தேகம் மரணமாக முதலில் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியது போலீஸ். உடற்கூறு ஆய்வில், சக்கரவர்த்தி நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பட்டது தெரியவந்ததும், கொலை வழக்காக மாற்றப் பட்டு உடனே இருவரை*



*போலீஸ் கைதும் செய்தது.*

*ஒருவரின் மரணத்திற்குத் தெளிவான காரணம் தெரியா விட்டால் இபிகோ சட்டத்தின் (IPC) பிரிவு 174ன் கீழ் முதலில் காவல்துறை வழக்குப் பதிவு செய்யும். பிறகு மரணத்தில் சந்தேகம் எழுந்தால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) பிரிவு 176ன் கீழ் வழக்கை மாற்றுவார்கள். கொலை என்பது உறுதியானால், கொலை வழக்காக மாற்றலாம். இந்த அடிப்படையில் தான் சக்கரவர்த்தி வழக்கு முதலில் மர்ம மரணம் எனப் பதிவு செய்யப்பட்டது.*

*போலீஸ் ஸ்டேஷன் பக்கம் ஒதுங்காத, செய்தித்தாள் படிக்கிற பாமரனுக்குகூட தெரிந்த இந்த உண்மை, உள் துறையை கையில் வைத்திருந்த முன்னாள் முதல்வர் பழனிசாமிக்கு தெரியவில்லை என்றால் அவர் முதலமைச்சர் நாற்காலியில் அமரவே தகுதியில்லாதவர். காவல் துறைக்குப் பொறுப்பு அமைச்சராக 4 ஆண்டுகள் இருந்த பழனிசாமிக்கு இந்த அடிப்படை அறிவு கொஞ்சம் கூட இல்லை.*

*பா.ஜ.க. பிரமுகர் சீனிவாசன் கொலை வழக்கில் கைதான நபர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட காரணத்தினாலேயே பா.ம.க. பிரமுகர் சக்கரவர்த்தி கொலை நடந்துள்ளது. பாஜகவுடன் கூட்டணி சேர்ந்து, பாமகவைக் கூட்டணியில் சேர்க்கும் முயற்சி யில் இறங்கியிருக்கும் பழனிசாமி, பாமகவுக்கு தூது விடுவது போல அறிக்கை விட்டிருக்கிறார். பா.ம.க. நிர்வாகியைக் கொலை செய்தவர் பா.ஜ.க. நிர்வாகி யின் மகன் என்று பழனிசாமி ஏன் சொல்லவில்லை?*

*அரசியல் செய்ய எதுவும் கிடைக்காமல், ஏதேனும் குற்றச் சம்பவங்கள் நடக்காதா? அதை வைத்து ஏதேனும் மலின அரசியல் செய்ய முடியாதா? எனக் குற்றங்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார் பழனிசாமி.*

*திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே சொல்லும். தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்ட தரவுகளின்படி 2020 ஆண்டு பழனிசாமியின் ஆட்சியில் IPC ல் பதியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 8,91,700, திமுக அரசின் தீவிரமான நடவடிக்கையால் 2022 ஆண்டு IPC ல் பதியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 1,93,913 குறைந்தது. கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் குற்றங் களைக் குறைத்தது திராவிட மாடல் அரசுதான். இந்த இலட்சணத்தில் கேடுகெட்ட ஆட்சி நடத்திய பழனிசாமி அ.தி.மு.க. ஆட்சியில் அமைதியும் வளமும் வளர்ச்சியும் பெற்ற தாகக் கூசாமல் அடித்து விட்டுக் கொண்டிருக்கிறார்.*

**துப்பாக்கி கலாச்சாரம் பற்றி பழனிசாமி பேசலாமா?**

*துப்பாக்கி கலாச்சாரம் பற்றியெல்லாம் பழனிசாமி பேசலாமா? அ.தி.மு.க. ஆட்சியில் துப்பாக்கி மலிவு விலைக்கு விற்கப்பட்டதும், அதை வாங்கி கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டதையும் மக்கள் மறக்க மாட்டார்கள். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுதான் துப்பாக்கி கலாச்சாரம் வந்தது போல பழனிசாமி பேசுவதைப் பார்த்து மக்கள் சிரிப்பார்கள்.*

*★ 2018ல் கள்ளத் துப்பாக்கி கடத்தல் வழக்கில் சென்னையைச் சேர்ந்த பரமேஸ்வரன் எனும் காவலரே கைதானார்,*

*★ 2020ல் 8 துப்பாக்கிகள், 60 தோட்டாக்களுடன் கும்பகோணம் அருகே மருத்துவர் ராம்குமார் பிடிபட்டார்.*

*★ 2018 ஏப்ரலில் அடையாறு இந்திரா நகர் வங்கியில் துப்பாக்கி முனையில் 7 லட்சம் கொள்ளை.*

*★ 2018ல் கன்னியாகுமரியில் 10 ஆயிரம் ரூபாய்க்கு நாட்டுத் துப்பாக்கி விற்பனை.*

*★ 2020 மே மாதம் திருப்பூரில் நிலம் தொடர்பான பிரச்சினையில் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணம் கேட்ட நபர்,*

*★ 2020 ஜூலையில் ஈரோட்டிலிருந்து 9 எம்.எம். ரகக் கள்ளத்துப்பாக்கி, 5 தோட்டாக்களுடன் திருநெல்வேலிக்கு வந்த குமுளி ராஜ்குமார்.*

*★ 2020 செப்டம்பரில் சென்னை பெரம்பூரில் வீடு புகுந்து துப்பாக்கியைக் காட்டி பெண்ணை மிரட்டிய நபர்,*

*★ 2020 நவம்பரில் திருக்கோவிலூர் அருகே மளிகை கடைகாரர் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை.*

*இப்படிப் பழனிசாமி ஆட்சியில் நடந்த துப்பாக்கி சம்பவங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். "துப்பாக்கி கலாச்சாரத்தை ஒடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?" என்று கேள்வி கேட்க எடப்பாடி பழனிசாமிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?*

**உயர்நீதிமன்றம் கண்டித்துள்ளது!**

*2020 ஆகஸ்ட் மாதம் வழக்கு ஒன்றை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கிருபாகரன், "பீகார், ஜார்கண்ட், சத்தீஸ்கரில் இருந்து நாட்டு துப்பாக்கி கள் தமிழகத்தில் ரவுடிகள், குண்டர்கள், அரசியல்வாதிகளுக்கு சப்ளை செய்யப்படுகிறது. அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து துப்பாக்கி கலாச்சாரத்தை தடுக்க வேண்டும்" என்று கூறியது பழனிசாமிக்கு தெரியாதா? இது தான் அவருடை ஆட்சியில் நிலவிய அமைதி, வளம், வளர்ச்சியா?*

*சக்கரவர்த்தி கொலை வழக்கில், "கள்ளத் துப்பாக்கி எப்படி கிடைத்தது என்பதை விசாரிக்க வேண்டும்" என்று சொல்லும் எடப்பாடி பழனிசாமி, அதிமுக ஐடி விங் பிரமுகர் பிரபாத்துக்கு டபுள் பேரல் துப்பாக்கியை யார் வாங்கி கொடுத்தது? என பழனிசாமி விளக்குவாரா?*

*திமுக அரசு அமைந்த பிறகு தான் குற்றங்கள் தடுக்கப் பட்டு, குறைந்து கொண்டு வருகின்றன. சட்டம் ஒழுங்கைப் சிறப்பாகப் பாதுகாத்து வருவதால்தான் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 விழுக்காடாக உயர்ந்து நாட்டிலேயே முதலிடத்தில் இருக்கிறது.*

*இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*




தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போக்குவரத்துத் துறை சார்பில் புதிய விரிவான மினி பஸ் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு 27 புதிய வழித்தடங்களில் மினி பஸ் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் பெ.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.உமரி சங்கர், இளைஞரணி அமைப்பாளர்கள் பை.மூ.ராமஜெயம், மதியழகன் பகுதிச் செயலாளர் ரவீந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.